Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 } ஈரோடு, 31-3-1945 பங்குனி-மீ 18உ { இதழ் 25

# இறைவன் இருந்தால்----?

★

"தமிழ் மகன்"

"எல்லாஞ்செய்யவல்ல"— "எண்ணியவரே ஆற்றவல்ல"—"சர்வ வல்லமையுள்ள" என்று கூறப்படுவதான—நம்பப்படுவதான 'இறைவன்' என்பதான 'கடவுள்' என்பது ஒன்று இருக்குமானால், அல்லது பல இருந்தால்,—உலகில் பல திறமான அநியாயங்களும், கொடுமைகளும், புரட்டுகளும், திருட்டுகளும், இன்னோரன்ன பிறவும் நடக்கவிட்டுக் கொண்டிருக்குமா? 'இன்பமே உருவாய் உள்ள இறைவன்" என்று சொல்லப்படுவதான அந்தக் "கடவுள்" மட்டும் இன்பமாயிருந்து கொண்டு மற்ற பிராணிகளையும், மனிதரையும் துன்பத்தில் அமிழ்ந்துகிடக்கச் செய்துகொண்டிருக்குமா? மக்களுக்குள்ளேயே ஒருவர் உயர்ந்தவர், இன்னொருவர் தாழ்ந்தவர் என்று வேற்றுமை கற்பிக்கப் பார்த்துக்கொண்டிருக்குமா? ஒரு சாரார் இன்பமாய் வாழ்வு நடாத்துவதற்கும், மற்றொரு சாரார் துன்பவாழ்வில் இருப்பதற்கும் துணை செய்துகொண்டிருக்குமா? வாயில்லாப் பிராணிகளை—சாதுவான மிருகங்களை—எதிர்த்து நிற்க வலிமையற்ற உயிர்களை, வலியுள்ள மக்கள் என்பார் கொலை செய்வதற்கு இடஞ்செய்து கொண்டிருக்குமா? தனது "தெய்வீக'த் தன்மையைத் தானே முன்னின்று வெளிப்படுத்திவைக்க இயலாமல் 'தாசர்'கள் மூலமாய்த் தனது "தெய்வீக" சக்தியை விளம்பரஞ் செய்யும்படி விட்டுக் கொண்டிருக்குமா? "சர்வவல்லமை"யுடையதான அந்தக் 'கடவுள்' மாரி என்றும், காளி என்றும், காட்டேறி யென்றும், முனியாண்டி என்றும், ராக்காயி என்றும், மாடன் என்றும், கறுப்பன் என்றும் கூறப்படுவதான 'குட்டிக் கடவுள்'களையும் 'எதிரிக் கடவுள்'களையும் இருப்பதற்கு அல்லது, உண்டாக்கப்படுவதற்கு விட்டுக் கொண்டிருக்குமா?

பல வேறு குறுபடியான சமயங்களை (மதங்களை) உண்டாக்க விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா? மனிதர் முதலிய பிராணிகள்பிறந்து மறுபடியும் இறந்துபோகும்படி படைத்திருக்குமா? தேங்காய், பழம், சாம்பிராணி, சூடன், ஊதுபத்தி, தீர்த்தம் ஆகிய பொருள்களைக் கொண்டுதான் தன்னைப் பூஜிக்கவேண்டும் என்று எதிர்பார்க்குமா? தான் இருப்பதற்குக் 'கோயில்' வேண்டும் என்று கேட்குமா? ஆயிரக்கணக்கான—லட்சக்கணக்கான—கோடிக்கணக்கான பொருளைச் செலவிட்டுத் 'திருவிழா' என்பதின் மூலமாய்த் தன்னைக் கொண்டாட வேண்டும் என்று கூறுமா? அல்லது எண்ணுமா? பெண்கள் தாழ்ந்தவர்; ஆண்கள் உயர்ந்தவர் என்று மக்களால் கற்பிக்கவிட்டுக் கொண்டிருக்குமா? மக்கள் முதலிய பிராணிகளுக்குப் 'பிணி' முதலிய துன்பங்கள் வர—அல்லது உண்டாக்கப் பார்த்துக்கொண்டிருக்குமா? மக்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் பிரிந்து நின்று சச்சரவுசெய்துகொண்டிருக்க விட்டுக்கொண்டிருக்குமா? 'இறைவன்' என ஒன்றில்லை என்றோ இறைவனைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்றோ தன்னால் உண்டாக்கப்பட்ட மக்களில் சிலர் எண்ணும்படியான—கூறும்படியான சாக்ரடீஸ், புத்தர், இங்கர்சால், பெரியார் ராமசாமி உள்ளிட்டார்களுக்குள் புகுந்து அவர்கள் மனதை மாற்றாமல் வாளாவிருக்குமா? அல்லது "இறைவன் என ஒன்றில்லை" என எண்ணும்படியாக மக்களைப் படைக்குமா? சாதம், காய், கனி, கிழங்கு முதலிய வஸ்துக்களை உண்டுதான் மக்கள் முதலிய பிராணிகள் உயிருடன் வாழவேண்டும் என்பதான இயற்கையை உண்டாக்குமா? சதா "தெய்வ பக்தியை"யே உடைய மக்களுக்கும் துன்பங்களும், கவலைகளும், கொடுமைகளும் உண்டாகும்படி—உண்டாக்கும்படி பார்த்துக்கொண்டு பேசாமல் 'மௌனசாமி'யாயிருக்குமா? நியாயமாகவும், யோக்கியமாகவும், புண்ணியமாகவும் வாழ்வு நடத்துவோர் துன்புறவும், அயோக்கியர்களும், அநியாயக்காரர்களும், கொலைகாரர்களும், "இன்ப வாழ்வில்" இருக்கவும் பார்த்துக்கொண்டிருக்குமா? பார்ப்பனர் என்பவர் பார்ப்பனரல்லாதார் என்பவர்களை நயவஞ்சகமாய்க் கொடுமையாய்—அநியாயமாய் நடத்தி வருவதற்கு விட்டுக் கொண்டிருக்குமா? ஒரு நாட்டாரை இன்னொரு நாட்டார் அடக்கி ஆள்வதற்கும்—கொடுமையாய் நடத்துவதற்கும் விட்டுக் கொண்டிருக்குமா? தனக்கே (கடவுள்) இப்போது பெரும் ஆபத்து வந்து சேரும்படி விட்டுக் கொண்டு பேசாதிருக்குமா? தான் இருப்பது உண்மைதான் என்பதை மக்கள் முதலியோர் உணரும்படி—அறியும்படி—பார்க்கும்படி நேரில் இன்னும் வராமல் வாளாயிருக்குமா? இயற்கையிலேயே மக்கள் முதலியோர் அறிவையடைவதற்குத் துணையில்லாமல் செயற்கையின் வாயிலாய்ப் பெறுவதற்கு விட்டுக்கொண்டிருக்குமா? 'நீதி'யைக்கொண்டு மக்கள் வாழும்படி செய்யாமல் 'அரசு சட்டம்' மூலமாய் மக்கள் வாழும்படி தண்டனையுறும்படி விட்டுக்கொண்டிருக்குமா? தன்னுடைய இருப்பிடமான 'கோயில்' 'தேவாலயம்' (சர்ச்) 'மசூதி' 'பீடம்' 'மலை' முதலியவைகளில் 'இடி' விழுவதற்கும் அழிந்து போவதற்கும் விட்டுக்கொண்டிருக்குமா? மக்களின் வாழ்வுக்கு அவசியமானவைகள் என்று கூறப்படுவதான உணவு, உடை, நீர், காற்று, தீ ஆகியவைகளை எக்காலத்திலும் சமமாய்க் கொடாமல், சில சமயங்களில் மிதமாகவும், வேறு சில சமயங்களில் அதிதமாகவும் கொடுக்குமா? உலகில் உள்ள அனைவருக்கும் ஒரே விதமான குணத்தை—எண்ணத்தை—அறிவை பிறவற்றைக் கொடாமல், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான குணங்களையும் எண்ணங்களையும்—அறிவுகளையும் உண்டாக்கி பலத்த 'குளறுபடி'யை உண்டாக்குமா? கோடிக்கணக்கான மக்கள், உண்ண உணவின்றி உடுத்த ஆடையின்றி காடுகளிலும், மலைகளிலும், வனங்களிலும், கிராமங்களிலும், நகர்களிலும் துன்பவாழ்வு நடத்தும்படி பார்த்துக்கொண்டு—அல்லது செய்து கொண்டிருக்குமா? சில சமயங்களில் அதிகம் மழை பெய்யவும், சில சமயங்களில் பெய்யாமலிருக்கவும் செய்துகொண்டு அல்லது பார்த்துக்கொண்டிருக்குமா?

ரோஜா முத்தையா

# திராவிடக் கழகங்கள்

4-2-45-ல் கூடிய சென்னிமலை திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர் சி. டி. நாயகம் மறைவுக்கு வருந்துவதாகவும், ஷை கழகத்திற்கு பொருளுதவி செய்யுமாறு கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

தஞ்சை ஜில்லா அய்யம் பேட்டை திராவிடக் கழக கூட்டம் 10-2-45ந்தேதி நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் எஸ். செந்திருவேலு தலைவராகவும், ஆர். எஸ். முத்துசாமி செயலாளராகவும், சமரசபாண்டியன் துணைச் செயலாளராகவும், எம். இராசலிங்கம் பொருளாளராகவும் 9-பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

தஞ்சை ஜில்லா, கணேசபுரம் திராவிட இளைஞர் கழகத்திற்கு தோழர்கள் சி. இராமையன் தலைவராகவும், வை. நன்மாறன் செயலாளராகவும் 7-பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

11-2-45ல் தோழர் எ. அம்மையப்பன் தலைமையில் நடைபெற்ற திருச்சி நாகம்மையார் திராவிடர் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன்' தங்கமணி இராசன், மீ. வீசன்ராஜு முதலியவர்கள் 'திராவிடநாடு பற்றி' விளக்கிப் பேசினார்கள்.

* *

11-2-45-ந் தேதி தோழர் கெ. எஸ். சிவராம கிருஷ்ணன் இல்லத்தில் நடைபெற்ற பட்டுக்கோட்டை திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டத்தில் உள்ளூர் தோழர் கே. நாடிமுத்து, தோழர் சி. டி. நாயகம் ஆகியவர்களின் மறைவுக்கு வருந்தியும், தோழர்கள் வி. எஸ். குழந்தை, எ. சாமய்யா ஆகியவர்களைக் கமிட்டி மெம்பர்களாக முறையே பேராவூரணி, மதுக்கூர் (கிளை) கழக சார்பில் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

மன்னார்குடி திராவிட கழகக் கூட்டம் தோழர் வி. பி. என். பாப்பையா தலைமையில் 7-2-45-ந் தேதி நடந்தது. தோழர்கள், செ. தெ. நாயகம் மறைவுக்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கழக முன்னேற்றங் கருதி மாதந்தோறும் கூட்டம் கூட்ட காரியதரிசிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

* *

3-1-45-ந் தேதி நடைபெற்ற தென்னூர் திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர்கள் வி. என். ராமச்சந்திரன் தலைவராகவும், ராஜலிங்கம் செயலாளராகவும், பொன்னுச்சாமி பொருளாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

ரோஜா முத்தையா

* *

குனியமுத்தூர் திராவிட கழகத்தின் திறப்பு விழா 4-2-45ல் தோழர் ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்களின் தலைமையின் கீழ் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் ஆற்றிவைக்கப்பட்டது. கோவை கல்லூரி மாணவர் இராமசாமி அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் மதுரை நகர் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் 11-2-45-ந் தேதி தோழர் ஆர். ஷண்முகம் தலைமையில் கூடியது. ஷை கழகத்திற்கு தோழர்கள் டி. நாராயணன் பி. ஏ., பி. எல். தலைவராகவும், ஆர். கெ. செஞ்சியப்பன் துணைத் தலைவராகவும், கெ. ஐ. சக்குனி பொருள் காப்பாளராகவும், சி. முத்திருளாளர், பீ. பொன்ராமன் ஆகியவர்கள் செயலாளர்களாகவும் மற்றும் 24-பேர் நிர்வாக அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின் அதே மேடையில் தோழர் ஆர். சண்முகம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினார்கள்.

* *

நாமக்கல் திராவிட கழகத்தார் சார்பாக ஊர்கில் தோழர் பி. முத்துசாமி பிள்ளை பி. ஏ., பி. எல்., தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மறைந்த டாக்டர் டி. எஸ். ராமசாமி பிள்ளை எம். பி. பி., எம். டி. எம். ஓ. அவர்களின் மரணத்தைக் குறித்து அன்னார் குடும்பத்தருக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

* *

நாகை திராவிடர் கழகத்தின் மாதாந்திரப் பொதுக் கூட்டம் 12-3-45-ந்தேதி தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடியது. பல தோழர்கள் பேசிய பின் தோழர் சி. டி. நாயகம் மறைந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. கழக உறுப்பினர் தோழர் பி. கே. பக்கிரிசாமியின் துணைவியார் இயற்கையெய்தியதற்கு வருந்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*

ஆத்தக்குடி வடக்கூர் திராவிடர் கழக 5-வது ஆண்டுவிழா 30-1-45ல் மாலை 4-மணிக்குத் தோழர் வி. எஸ். சோமதிநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சின்னராசு, என். சிவரத்தினம், எஸ். தமயந்தி அம்மையார், எம். எஸ். சிவசாமி ஆகியோர் பேசினார்கள்.

* *

திருச்சி நாகம்மையார் திராவிடர் கழக நிர்வாகக்குழுவின் கூட்டம் தோழர் பி. வி. சுந்தரம் தலைமையில் 4-2-45 தேதி நடைபெற்றது. கழக கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டு வாசகசாலை நடைமுறை குறித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, செ. த. நாயகம், சர் இரேதயம் நடிகர் எஸ். நாராயணசாமி, டி. பி. வேதாசலம் அவர்கள் தாயார் ஆகியோர் இயற்கை எய்தியமைக்கு அனுதாபத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

* *

மாப்பிள்ளை யூரணி திராவிடர் கழக பொதுக்கூட்டம் 27-2-45ல் மா. சி. பண்டாரநாடார் தலைமையில் நடைபெற்றது கழக நோக்கங்கள் பற்றியும் கிராம ரேஷன் முறைபற்றியும் தோழர்கள் காத்தமுத்து, அன்பரசன், எஸ். காசிம், வீர சிகாமணி முதலியவர்கள் பேசினார்கள்.

O O

தவட்டுப்பாளையம் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் 28-2-45 தோழர் பி. பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. கணபதி, டி. பி. மூர்த்தி பேசினர், நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

O O

கல்லிடைக்குறிச்சி திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் தோழர் முத்துகிருஷ்ணன் தலைமையில் 4-3-45ல் நடைபெற்றது. தோழர் டி. எம். பீர்முகம்மது பேசினார். தோழர் சி. கணபதியவர்களைச் செயலாளராகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

O O

4-3-45ல் தோழர் ஜி. பி. சேதுராமன் தலைமையில் நடந்த கோபி திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர் வி. ஆர். சுப்பு வெண்டாரம் அவர்கள் இயற்கை எய்தியது குறித்து அனுதாபத்தீர்மானம் நிறைவேறியது.

O O

7-3-45ல் தோழர் கே. எ. குருசாமி தலைமையில் நடந்த சீர்காழி திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர் என். ராமசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

O O

6-3-45ல் பூவாளூரில் தோழர் நல்லதம்பி தலைமையில் நடந்த கூட்டத்தில், திராவிடர் கழகம், தோழர் பி. சின்னத்துரையவர்களைத் தலைவராகக்

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# தேசிய சர்க்காரும் லாஸ்கியோசனையும்

## மாஜி மந்திரி முத்தையா முதலியார் அறிக்கை

மாஜிமந்திரி தோழர் எஸ். முத்தையா முதலியார் C. I. E. அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கை வருமாறு:

"லாஸ்கி திட்டம் என்று சொல்லப்படுவதற்கு உண்மையாகவே போராசிரியர் லாஸ்கி ஆக்கியோனாக இருப்பாரேயானால் ஒருவர் வியப்படையாமல் இருக்க முடியாது. 'முக்கியமான கட்சி'களின் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய சர்க்கார் நிறுவவேண்டுமென்றும், பிரதம மந்திரி, தற்காப்பு மந்திரி ஆகிய இருவர்களில் ஒருவர் காங்கிரஸ்காரராகவும் மற்றொருவர் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவராகவும் இருக்கவேண்டுமென்றும் அவர் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் இவ்விரு கட்சிகளைத் தவிர வேறு கட்சியையோ, கட்சிகளையோ தேசிய சர்க்காரில் "முக்கிய கட்சி"யாக அங்கீகரிப்பதாகத் தெரியவில்லை; அப்படியே அவர் அங்கீகரித்தாலும், அத்தகைய கட்சியின் அல்லது அத்தகைய கட்சிகளின் பிரதிநிதிகள் அவருடைய உத்தேச சர்க்காரில் அவர்களுக்குக் கீழடங்கி நடக்கவேண்டியவர்களா என்பதும் தெரியவில்லை.

தோழர் லாஸ்கி அங்கீகரித்திருக்கும் இருமுக்கிய கட்சிகளில் ஒன்றின் போக்கு என்ன என்பது யாவருக்கும் தெரிந்ததேயாகும். அதாவது யுத்த நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையிடவேண்டுமென்பது; மற்றொரு கட்சியின் நடுநிலைமை அதாவது எதிர்ப்புமில்லை ஆதரிப்புமில்லை என்பதாகும். அவ்விருகட்சிகள் அப்படியிருந்தும், இந்தியா யுத்தத்திற்கு 25 லட்சம் ஆள்களைத் தந்து உதவியிருக்கிறது; மற்றும் ஏராளமான பணமும், சாமான்களும் கொடுத்துதவியிருக்கிறது. இவைகள் போதாதா இந்நாட்டின் பிரதிநிதிகள் இவ்விரு கட்சி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இந்த நிலையில், இவ்விரு கட்சிகளையும் ஒன்றுசேர்த்துப்பார்த்தாலும் அவைகள் மைனாரிட்டிகளாக விளங்குகையில், யுத்தம் முடிவுபெறுவதற்குள் அக்கட்சிகளிடம் நாட்டை ஒப்புவிக்கவேண்டுமென்று முதிர்ந்த அரசியல் அனுபவமுள்ள போராசிரியர் லாஸ்கி போன்றார் கூறியிருப்பார் என்று நம்மால் நம்ப முடியவில்லை.

டாக்டர் கரே சொன்னது போல், ஜெர்மனி தோற்றுவிட்டது, ஜப்பான் தோற்று வருகிறதென்பதைக்கண்ட காங்கிரஸ்காரர்கள், சர்க்காரைக் கைப்பற்றி ஆதிக்கம்பெற முயலுகிறார்கள். ஆகவே, 1939-ல் தாங்கள் வாந்தி எடுத்ததையே மீண்டும் விழுங்க மனமுவந்து முன் வருகிறார்கள்; 1942-ல் உதறித் தள்ளிய—தீண்டத் துணியாத சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் திட்டத்தை அணைத்துத் தழுவிக்கொள்ள முன் வருகிறார்கள்.

அசம்பிளியில் எவ்வளவு தான் கைலாகு கொடுத்துக் கொண்டு இருவரும் ஒத்துழைப்பவர்களாகக் காட்சியளித்தாலும், பாகிஸ்தான் திட்டத்தைக் கொண்டிருக்கிற முஸ்லிம்லீக் காங்கிரசுடன் ஒத்துழைக்க இணங்கி வராது என்பது நிச்சயம். லீக்குக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது வடமேற்கு மாகாணமாகும். சர்க்காரின் கொள்கை மர்மமாகவேயிருந்து வருகிறது. அதனுடைய ஆழத்தைக் கண்டாலும் இவர்களின் மனத்தின் ஆழத்தைக் காண முடியாது என்றே சொல்லலாம். நண்பர்களை உதைத்துத் தள்ளுவார்கள்; எதிரிகள் கால்களுக்கு முத்தமிடுவார்கள். இது சகஜம். இதற்கு இலக்காக விளங்குவது வடமேற்கு எல்லைப்புற மாகாணமாகும். ஆனால் அங்குள்ள காங்கிரஸ் இவ்வளவு சலாக்காரர்கள் அல்ல.

விரும்பினால் கவர்னர்கள் கட்புக்கொள்ளத் தயாராகயிருப்பார்கள் என்று தோழர் அமெரி கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் இன்புற்று வாழட்டும்; அதைக் குறித்து நமக்குக் கவலையில்லை. ஆனால் ஒன்றுமட்டும் எச்சரிக்கிறோம், அதாவது வினை விதைத்தவன் வினையறுப்

# சென்னையிலே!

1945 எப்ரல் மாதம்

1-ந்தேதி ஞாயிறு காலை 9-30 மணிக்கு செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் சென்னை 14வது திராவிட (ஜஸ்டிஸ்) மாநாடு.

o o

### தோழர் தாலமுத்து—நடராசன் நினைவு கட்டிடம்

2-4-45ந் தேதி திங்கள் மாலை 6-மணிக்கு, சென்னை மூலகொத்தளம் மயான மைதானத்தில், வீரர்கள் நடராசன்—தாலமுத்து ஞாபகார்த்த கட்டிடத்தை, தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. திறந்து வைப்பார்கள். பல பிரமுகர்கள் பேசுவார்கள். அனைவரும் வருக.

o o

### குன்னத்தூரில் தலைவரும்—தளபதியும்

3-4-45 செவ்வாய் மாலை 6-மணிக்கு பூந்தமல்லிக்கடுத்த குன்னத்தூர் நாடகக் கொட்டகையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தளபதி டி. சண்முகம் தலைமை வகிப்பார். அதுசமயம் தலைவர் பெரியார் அவர்களும், தளபதி அண்ணாதுரை அவர்களும் பேசுவார்கள். அனைவரும் வருக. ஒலிபெருக்கி உண்டு.

குன்னத்தூர்
திராவிடர் கழகத்தார்.

o o

### சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் (நாடகம்)

29-4-45 ஞாயிறு மாலை 6மணிக்கு செயிண்ட்மேரீஸ் மண்டபத்தில் தளபதி C. N. அண்ணாதுரை M. A., மற்றும் பல தோழர்களும் நடிக்கப்போகும் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்.

---

இப்பொழுது தான், இந்தியா குணமடைந்து வருகிறது; உலகமெங்குமிருந்து டாக்டர்களும் நிபுணர்களும் வந்திருக்கிறார்கள். ஆகவே, நாட்டை இதைவிட மோசமான நிலைமைக்குக் கொண்டு போகமாட்டார்கள் என்று நம்புகிறோம்."

---

தங்கவயல் அயோத்திதாஸ் பழந்தமிழர் கழக முதலாண்டு விழா 31-12-44ல் தோழர் முனுசாமி தலைமையில் நடைபெற்றது. பலர் சொற்பொழிவாற்றி

## இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) முதலாவது மாநாடு

8-4-45-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணிக்கு காரைக்குடி, கிருஷ்ணா டாக்கீசில் நடைபெறும்.

**தலைவர்:** டி. சண்முகம், திருவெற்றியூர்.

**திறப்பாளர்:** பெரியார் ஈ. வெ. ராமசாமி.

**கொடியேற்றுபவர்:** க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்)

**திராவிட நாட்டுப் படத் திறப்பாளர்:** சி. என். அண்ணாதுரை எம். ஏ.

**சி. டி. நாயகம் படத் திறப்பாளர்:** புலவர் நா. மு. மாணிக்கம்.

**பெரியார் ஈ. வெ. ரா. படத் திறப்பாளர்:** பி. ஜனார்த்தனம் பி. ஏ.

மற்றும் புரட்சிக்கவி பாரதிதாசன், வழக்கறிஞர் டி. பி. வேதாசலம், நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்) ஜே. எஸ். கண்ணப்பர், உடல்நலப் புலவர் சோமசுந்தரனார், எஸ். வி. லிங்கம், வீரமணி, முன்னாள் அமைச்சர் எஸ். ராமநாதன், கே. கே. நீலமேகம், எஸ். தவமணிராசன், மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

வரவேற்புக் கட்டணம் ரூ 3.
பிரதிநிதிக் கட்டணம் ரூ 1.
பார்வையாளர்களுக்குக் கட்டணம் இல்லை.

## திருச்சியில் பன்னீர்செல்வம் நாள்

### பொதுக்கூட்டம்

7-4-45 சனி மாலை 6-30 மணிக்கு திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் நடைபெறும்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர் தி. பொ. வேதாசலம் மற்றும் பல தோழர்களும் பேசுவார்கள்.

ஒலிபெருக்கி உண்டு.

## தென்மண்டல மாணவர் மாநாடு

### திருவாரூர்

ஏப்ரல் மாதம் திருவாரூரில் தென்மண்டல மாணவர் மாநாடு நடத்த ஏற்பாடுகள் செய்து வருவதாக தோழர் மு. கருணாநிதி அவர்கள் அறிவிக்கிறார்.

## ஈரோட்டில் சர் செல்வம் நாள்

### தளபதி அண்ணாதுரை சொற்பொழிவு

கோவை மாவட்டத் திராவிடர் கழகத்தினாதரவில் சர் ஏ. டி. பன்னீர் செல்வம் நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தியாகராயர் கட்டடத்தில் 26-3-45-ஆம் தேதி மாலை 7 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு 2000 பேர்கள் வரை வந்திருந்தார்கள். தோழர் கெ. கெ. அப்துல் சலாம் அவர்களை மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி பழைய கோட்டை இளைய குமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டது. தலைவரவர்களின் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், மைதீன் பாட்சா ஆகியவர்கள் பேசினார்கள். ஈரோடு சோப்பு வர்த்தக சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் தோழர் சி. என். ஏ. அவர்களுக்கு வாசித்தளிக்கப்பட்டது. அடுத்தபடியாக பலத்த கரகோஷத்தினிடையே தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் எழுந்து தமக்களிக்களிக்கப்பட்ட வரவேற்புத்தாளுக்கு பதிலளித்துவிட்டு, சர் ஏ. டி. பன்னீர் செல்வம் நாள் ஏன் கொண்டாடப்படுகிறது என்பதையும், திராவிடநாட்டுக்கு அவர் செய்த அரும்பணியை விளக்கியும், அவரைப்போல் ஒவ்வொரு திராவிடரும் பணி புரிய முன் வரவேண்டும் என்று விளக்கியும் சுமார் இரண்டுமணி நேரம் பேசினார். தலைவர் முடிவுரையுடனும் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்களின் நன்றி கூறலுடனும் கூட்டம் இனிது முடிந்தது. கூட்டம் துவக்கப்படுவதற்கு முன், ஈரோடு தமிழாசிரியர் சுந்தரராசன் அவர்களும் ஒரு மாணவரும் தமிழ்ப் பாட்டுகள் பாடினார்கள். சென்னிமலை திராவிடர் கழகத்தின் சார்பாக தோழர் பழனியப்பன் அவர்களால் தலைவருக்கும் தோழர்கள் அண்ணாதுரை, என். அர்ச்சுனன் ஆகியவர்களுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

## தஞ்சை மாவட்டத் திராவிட இளைஞர் மாநாடு

தஞ்சை மாவட்டத் திராவிட இளைஞர் மாநாட்டை, வருகிற மே திங்கள், 2-வது வாரத்தில் தஞ்சையில் நடத்துவதாக முடிவு செய்துள்ளோம்.

இம்மாநாட்டைச் சிறப்புற நடத்த ஒரு வரவேற்புக் குழு அமைக்க, வருகிற ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் மாலை 5 மணிக்கு கரந்தையிலுள்ள தஞ்சை திராவிட வாலிபர் கழகத்தில் ஒரு கூட்டம் நடைபெறும்.

## "போர்வாள்"

ராசிபுரம் ஓரியண்டல் தியேட்டரில் 1-4-45 முதல் நடக்கவிருந்த "போர்வாள்" எதிர்பாராதவிதமாக 10-4-45க்கு மாற்றப்பட்டிருக்கிறது.


## பெண் தேவை

சுமார் 28 வயதுடையவரும், நல்ல திட ஆரோக்கியசரீரம் பெற்றவரும், இலங்கையில் அரசாங்க உத்தியோகத்தில் மாதம் ரூ. 300 வரை வருவாயுள்ளவரும் அகமுடையார் குலத்தை சேர்ந்தவரும், இந்திய தமிழருமான வாலிபருக்கு பெண் தேவை:-

பெண் 22வயதிற்குட்பட்டதாய் கல்வியறிவுள்ளதாய்-சாதாரண அழகும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்ததாய், எக்குலத்தினும் இருக்கலாம்; சிறிது ஆங்கில அறிவு இருக்கல் நல்லது. முற்போக்கான கொள்கைகள் உடையவராய் இருப்பது விரும்பத்தக்கது.

கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விருப்பமுள்ளவர்கள் எழுதலாம்.

நாகலிங்கம்,
198 கீழவெளி வீதி, மதுரை.

## கொசு வலைகள்

நன்றாக தைக்கப்பட்டதும், நீடிக்கக்கூடியதுமான நன்கு மூலைகள் முழுமையும் உள்ள சிறந்த வெள்ளை வலைகள். ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு லேட் இனாம்.



| நீளம் | அகலம் | உயரம் | சாதாரணம் | சிறந்தது | ஸ்பெஷல் |
|---|---|---|---|---|---|
| 6 அடி | 3½ அடி | 3½ அடி | ரூ. 4/10 | 5/10 | 7/ 4 |
| 6 ,, | 4 ,, | 4 ,, | ,, 5/ 6 | 6/10 | 8/ 2 |
| 6½ ,, | 4½ ,, | 4½ ,, | ,, 6/ 2 | 7/10 | 8/12 |
| 7 ,, | 5 ,, | 5 ,, | ,, 7/ 4 | 8/ 6 | 10/– |
| 7½ ,, | 6 ,, | 6 ,, | ,, 8/– | 9/ 6 | 11/– |

பாக்கிங் & போஸ்டேஜ் ரூ. 1.

இரண்டு ஆர்டர்களுக்கு தபால்செலவு இனாம்.

The Indian Trading Co., Post Box No. 12220 Calcutta,


ரோஜா முத்தையா

## மாணவர் குழுவில் புரட்சிக் கவிஞர்

அண்ணாமலை நகரில் தன்மான உணர்ச்சிமிக்க மாணவர்கள் தோழர் கனக-சுப்புரத்தினம் அவர்களிடத்துள்ள அன்புப் பெருக்கின் அறிகுறியாக 15-3-45 மாலை கல்லூரித் தோட்டத்தில் ஒரு தேநீர் விருந்தளித்து ஒரு குழுவாய நிழல்படமும் எடுத்தார்கள். அதில் பேரறிஞர் அ. சிதம்பரநாதன் எம். ஏ., அவர்களும் தில்லைப்புலவர் மாணிக்கம் அவர்களும் கலந்துகொண்டதுடன், கவிஞரின் பாடல்கள் இன்றைய திராவிட இன எழுச்சிக்கு மிகவும் உதவிப் பெரும் பயனளித்து வருகிறதென்றும் அவருக்குத் திராவிட சமுதாயமே என்றும் கடப்பாடுடையதென்றும் கவிஞருக்கு அடுத்த ஆண்டிலேயே பெரும் வரவேற்பும் பெருவிருந்தும் இக் கல்லூரியிலே நடைபெறுமாறு மாணவர் ஊக்கம் மிளிர்கிறதென்றும் கவிஞரின் ஓவியமொன்று இக் கல்லூரியிலேயே ஆண்டுமையில் திறக்கப்படல் வேண்டுமென்ற அவாவுக்கு ஆதரவு பெருகிவருகிறதென்றும் விளக்கிய பின் கவிஞரும் சில நல்ல நோக்கங்களை எடுத்துக் கூறினார்கள். பின் நன்றி கூறலுடன் இனிது முடிந்தது.

## வந்தவாசி தோழர் இயற்கையெய்தினார்

25-3-45 அன்று காலை இவ்வூர் இயக்கப் பற்றுமிக்கவரும், பிரபல வியாபாரியுமான தோழர் கா. வி. தி. மாருதி அவர்கள் தன் 28-வது வயதில் இயற்கையெய்தினார். அவருடைய உடன் பிறந்தார்களாகிய தோழர்கள் தி. சீனிவாசன், தி. சடகோபன் அவர்களுக்கும், பெற்றோருக்கும், அவரது நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இரண்டு குழந்தைகளையும் விட்டுப் பிரிந்தார் எனத் தோழர் எ. பி. ஜனார்த்தனம் அவர்கள் தெரிவிக்கிறார்.


திராவிடத்தில் வெளிவந்துவிட்டது!
பவுன் நிப்பு கொண்டது!
நல்ல இரிடியம் அமைத்தது!
பேனா முழுதும் சுத்த வெள்ளியில் தயாரித்தது
பெரியார் பவுண்டன் பேனா
குறைந்தவிலை! சிறந்த வேலை!!
விலை ரூபாய் பதினாறு (16—0—0)
தபால் செலவு வேறு.
இன்றே எழுதுங்கள்! முந்துங்கள் முன்னால்! கிடைக்காது பின்னால்.
சோல் ஏஜண்டு:-
A. சுலைமான் பாஷா,
ஜெண்ட்ஸ் டைலர், ஆத்தூர்.
(சேலம் ஜில்லா)



அஜாக்கிரதையாகப் பேசுவதை நிறுத்தி
போராடும் நமது வீரர்களுக்கு பாதுகாப்பளியுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியத்திற்கு" என்று குறிப்பிட்டு

மே. த. கவர்னர் யுத்த நிதிக்கு
மீண்டும் பணம் கொடுத்துதவி
அவர்களுக்கு நலன் தேடுங்கள்.


## தமிழிசை வளர்ச்சி

### பாடத் திட்டம் வகுக்கப்பட்டது

24-3-45-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைக்கல்லூரியில் தமிழ்நாட்டிலுள்ள தமிழிசைக் கல்லூரி ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது. எல்லாக் கல்லூரிகளிலும் எண்டரன்ஸ், இசைச்செல்வம், இசைமணி என்னும் மூன்று வகுப்புகள் ஏற்படுத்தி அவ்வகுப்புகட்கு ஒரே மாதிரியான பாடத்திட்டம், பரீட்சை விதிகள் முதலியன வகுக்கப்பட்டன.

சென்னை அரசாங்கத்தாரால் நடத்தப்படும் லோயர் கிரேடு (Lower grade) ஹயர் கிரேடு (Higher grade) வகுப்புகட்கு உரிய இராகங்களுக்கு ஏற்ற தமிழ் பாட்டுக்கள் குறிக்கப்பெற்று அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

## புதுகை திராவிடர் கழகத் திறப்பு விழா

4-4-45 புதன் மாலை 6 மணிக்கு சென்னை பார்க் டவுன் மெமோரியல் ஹாலில் நடைபெறும். பாரிஸ்டர் எஸ். ஜி. ரங்கராமானுஜம் தலைமை வகிப்பார்.

பெரியார் ஈ. வெ. ரா., சி. என். அ., அன்பழகன், மற்றும் வெளியூர்த் தோழர்களும் 'திராவிடநாட்டுக் கலை' என்பது பற்றிப் பேசுவார்கள்.

அனைவரும் பெருந்திரளாக வருக!

காரியதரிசி.

## "திராவிட வீரன்"

சென்னை மூலக்கொத்தளம் ஆதிதிராவிட இளைஞர் கழகக் கட்டிட நிதிக்காக 'திராவிட வீரன்' என்ற சமூக சீர்திருத்த தமிழ் நாடகத்தை 15-4-45-ந் தேதி மாலை 5-30 மணிக்கு சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் மேற்படி கழகத்தாரால் நடத்தப்படும்.

# குடி அரசு

1945-ஞு மார்ச்சு-மீ 31-உ

## விவசாய வரிக்கு "ஜஸ்டிஸ் கட்சி" பேரால் எதிர்ப்பா?

சென்னை சர்க்காரால் விதிக்கப்படப்போகும் விவசாய வரியை ஆட்சேபித்து சிலர் அறிக்கை விட்டும் கவர்னர் இடம் நேரில் சென்று வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டும் இருக்கிறார்கள் என்பதாகப் பத்திரிக்கைகளில் சேதிகள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒரு அதிசயம் என்னவென்றால், தன்னையும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்ளுபவரும், அதிலும் தான்தான் சரியான ஜஸ்டிஸ்கட்சிக்காரர் என்பவரும், அதிலும் ஜஸ்டிஸ்கட்சிக்குத் தான் தான் தலைவர் என்று சொல்லிக் கொள்ளுபவருமான தோழர் பி. ராமச்சந்திர ரெட்டியார் C. B. E. அவர்கள் முன்வந்து, விவசாய வரி வேண்டாம் என்று அறிக்கை விட்டு கவர்னர் அவர்களையும் நேரில் கண்டு விண்ணப்பித்துக் கொண்டு இருப்பதோடு மிராசுதாரர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து அக்கமிட்டி அபிப்பிராயப்படி சர்க்கார் நடக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு வந்திருக்கிறார்.

இவர் தன்னை எந்தக்கட்சிக்கு பிரதிநிதி என்றும், எந்த கட்சிக்கு தலைவரென்றும் உரிமை பாராட்டிக்கொள்ளுகிறாரோ அந்த ஜஸ்டிஸ் கட்சியில் (அதாவது தன்னை தலைவர் என்று உரிமை பாராட்டும் "பேர் மாற்றப்படாத அதாவது S.I.L.F. ஜஸ்டிஸ்" கட்சியில்) 1935-ஆம் வருடம் முதல் நாளது வரை ஒரு தீர்மானம் அதுவும் இவர் முன்னிலையிலேயே ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் கல்லுப்போல் இருந்து வருகிறது. என்னவென்றால்;

"ஏழை விவசாயிகளின் அதாவது சிறிது விஸ்தீரணமுள்ள நிலத்தை வைத்துக்கொண்டு தானே பயிர் செய்தும் விளைந்த விளைவின் அளவு தங்கள் குடும்பத்திற்கே போதும் போதாததுமாயிருக்கின்ற விவசாயிகளின் வரிப்பளுவு இல்லாமல் இருப்பதற்கு ஆக அதிக (தேவைக்கு அதிகமான) விஸ்தீரணமுள்ள பூமியை வைத்துக்கொண்டு ஆட்களைக் குத்தகைக்கும், வாரத்திற்கும், வாடகைகளுக்கும் விட்டு தங்கள் தேவைக்கு மேலான வரும்படியை அனுபவித்து செல்வவான்களாகிக்கொண்டும், ஆடம்பரச்செலவு செய்து கொண்டும் இருப்பதற்கேற்றதாக இருக்கின்ற பூமியை உடையவர்களுக்கு, அதிலிருந்து வரும் வரும்படிக்கு (வியாபாரிகளுக்கு வருமானங்களுக்கு வரி போடுவதுபோன்ற கொள்கையில்) வருமான வரி போடவேண்டியது அவசியமாகும்" என்பது ஆக ஒரு தீர்மானம் இருந்து வருவதை சிறிதும் லட்சியம் செய்யாமலும்; சாதாரண தன்மையைக்கூட மதிக்காமல் திடீரென்று தன்னை மாற்றிக்கொண்டு அத்தீர்மானத்திற்கு விரோதமாக அறிக்கைவிடுவதும், வரி போடவேண்டாம் என்று கவர்னரை வேண்டிக்கொள்ளுவதும் என்றால் இப்படிப்பட்ட மக்களுள்ள கட்சியை பாமர மக்கள் தானாகட்டும்; சர்க்கார் தானாகட்டும் எப்படி மதிக்க முடியும்!

"ஜஸ்டிஸ் கட்சி பணக்காரர்கள் கட்சி, சுயநலக்காரர்கள் கட்சி, கொள்கையில்லாதவர்கள் கட்சி" என்றெல்லாம் எதிரிகளும் பாமர மக்களும் கருதுகிறார்கள் என்றால், இப்படிப்பட்டவர்கள் கட்சியில் உள்ளவரையில் மக்கள் எப்படிக் கருதாமல் இருப்பார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி உண்மையில் பாமர மக்கள் கட்சியாகவும், (பணக்கார மிராசுதாரர்களுக்கே அல்லாமல்) பெரும்பான்மை விவசாய மக்களான ஏழை விவசாய மக்களுக்காகவும் இருக்கும் கட்சியாக இருந்தால் இப்படிப்பட்டவர்கள் கட்சியில் இருந்தால் அக் கட்சிக்கு மரியாதை உண்டாகுமா என்று கேட்கின்றோம்.

காங்கரஸ்காரர்களை நாம் பரிகாசம் செய்கிறோம், அவர்களிடம் கொள்கையோ நாணயமோ இல்லை என்கிறோம்; ஆனால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் பரிகாசத்திற்கு இடமில்லாமலாவது கொள்கை, நாணயம் உடையவர்களாகவாவது நடந்து கொள்ளுகிறார்களா என்று இப்படிப்பட்டவர்கள் நடத்தைகளால் மற்றவர்கள் கேட்கமாட்டார்களா என்று கேட்கிறோம்.

கட்சியின் பேரால் வயிறுவளர்க்கும் 3-ந்தர 4-ந்தர ஆள்களுக்கும், கட்சியால் சுயநலப்பயன் பெறுவதற்கே கட்சியில் இருக்கும் 2-ந்தர ஆள்களுக்கும் கேலிக்கிடமில்லாத தன்மை, நாணயம் ஆகியவை இருப்பது சாத்தியமல்ல என்று சொல்லப்படுவதானாலும், கட்சிக்கு தலைவர்களாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிற திருவாளர்களுக்காவது இவற்றில் கவலை இருக்க வேண்டாமா என்று கேட்கின்றோம். சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் "இந்தியா ஒரு தேசம், இது பிரிக்க முடியாதது, மதம் ஜாதி இனம் ஆகியவைகளைக்கொண்டு தேசத்தைப் பிரிப்பது கூடாது" என்று சொல்லுவதும், தோழர் B. ராமச்சந்திர ரெட்டியார் C. B. E. அவர்கள், பணக்கார—அதிக வரும்படி வருகிற விவசாயிகளுக்கு 'விவசாய வருமானவரி போடக்கூடாது' என்று சொல்லுவதும் ஆன இப்படிப்பட்ட இவர்கள் இருவரும் ஜஸ்டிஸ்கட்சிக்குதலைவர்கள் என்றும் தலைவர்களாக வரவேண்டியவர்கள் என்றும் ஒரு கூட்டம் பாராட்டுப் பாடுவதும், அதற்கு ஒரு கூட்டம் கொடி பிடித்துக்கொண்டு பின்னால் திரிவதும் என்றால், இந்நாட்டு திராவிட மக்கள் அதற்கேற்ற அவ்வளவு அறியாமையும், மான உணர்ச்சி அற்ற தன்மையுமான ஈன நிலையில் இருப்பதாக இவர்களது—இக்கூட்டத்தார்களது எண்ணமா என்று கேட்கின்றோம்.

நாம் திராவிட இனம் என்பதும் நம் நாடு திராவிடநாடு என்பதும், நாம் இந்தியர் அல்ல, நம் நாடு இந்தியா அல்ல, இந்துக்கள்கூட அல்ல என்பதும், (இதனாலேயே) நம் திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்பதும், இன்றைக்கு 6 வருஷங்களுக்கு முன்பு இருந்தே ஜஸ்டிஸ்கட்சியில் இருந்து வரும் கொள்கையும் திட்டமும் ஆகும். அதோடு இந்த ஐந்தாறு

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 31-3-45ந் தேதி வரை 30548 அங்கத்தினர்கள் ரூ.3003—1—0 சந்தா

மார்ச்சு மாதம் 31ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5114 | 9. வட ஆற்காடு | 1571 |
| 2. தஞ்சை | 5036 | 10. மதுரை | 1353 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 760 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 2096 | 13. இலங்கை | 165 |
| 6. திருநெல்வேலி | 2084 | 14. பெங்களூர் | 158 |
| 7. சென்னை | 1700 | 15. புதுக்கோட்டை | 59 |
| 8. தென் ஆற்காடு | 1638 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 30548. சந்தா ரூ 3003-1-0.

வருஷ காலமாகவே முஸ்லிம் லீக் கோரிக்கையாகிய பாகிஸ்தான் கோரிக்கையையும் ஆதரித்துத் தீர்மானங்களும் செய்து வந்திருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் கூடவே இருந்து ஒத்துப் பாடி ஜே முழக்கம் பெற்ற தோழர் சர் ஆர். கே. அவர்கள் திடீரென்று இதற்கு விரோதமாய் பேசி எதிரிகளின் புன்சிரிப்புக்கு ஆளானதோடு மாத்திரமல்லாமல், ஜஸ்டிஸ் கட்சியையே குழிதோண்டிப் புதைக்கத் துணிந்து விட்டார் என்றால் அதற்கடுத்தாற் போல் தோழர் எம். ராமச்சந்திர ரெட்டியார் அவர்களும், செட்டியாருக்கு தான் இளைத்தவரல்ல என்று ஏழை விவசாயிகள் ஏன் கேடுகெட்டாலென்ன?, பணக்கார விவசாயிகளுக்குத்தான் நான் பிரதிநிதி என்று கூறுவதுபோல் கூறிக் கொண்டு தைரியமாய் வெளிவந்து, ஏழை மக்களின் எதிரிகளின் புன்சிரிப்புக்கு ஆளாகி ஜஸ்டிஸ் கட்சியை அடியோடு புதைக்கப் பார்க்கிறார் என்றால், நம் மக்களுக்கு இப்படிப்பட்ட பெரியோர்களால்—தலைவர்கள் என்பவர்களால் ஏற்படும் பொல்லாத சம்பவங்கள் நகச்சுத்தி (விரல்சுத்தி)ப் புண்ணின் மீது உலக்கைக் குத்து விழுந்தது போல் தொல்லைகொடுத்துக் கொண்டே வருகிறது என்று துக்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

இந்த விவசாயவரியை ஆட்சேபித்ததின் மூலமும், பாகிஸ்தான், திராவிடநாடு ஆகியவைகளுக்கு எதிர்ப்பாய்ப் பேசியதன் மூலமும் நாளைக்கு "சென்னை சர்க்காரில் ஏற்படப்போகும்" (ஏற்படுவது அவ்வளவு சுலபமல்ல) கலப்பு மந்திரி சபைக்கு இவ்விரு கனவான்களையும் காங்கரஸ்காரர்கள் கூட்டு மந்திரிகளாய் ஏற்றுக் கொள்ள வசதி இருக்கும் என்று கனவு காண்கிறார்களோ என்பது நமக்கு விளங்கவில்லை. அப்படி இவர்கள் நினைத்து இருந்தால் அது மிகவும் தைரியம் பொருந்திய காரியமாகத்தானிருக்க வேண்டும். ஆனால் ஒரு காரியம், காங்கரஸ்காரர்கள் இப்படிப்பட்டவர்களைத்தான் வரவேற்பார்கள் என்றாலும், இவர்களை—இப்படிப்பட்ட கொள்கை உடையவர்களை அந்த மந்திரி பதவிகளை சரிமானம் (ஜீரணம்) செய்ய, மக்கள் விட்டுக் கொண்டிருப்பார்களா என்பது யோசிக்கத்தக்கதாகும். இவர்கள் இம்மாதிரி குறுக்கு வழியில் சென்று கொண்டு தொல்லைப்படுவதைவிட, பிராயச்சித்தம் செய்து கொண்டு காங்கரசில் சேர்ந்து பதவி அனுபவித்துவிட்டு பிறகு சௌகரியம் போல் பார்ப்பது சிறந்த புத்திசாலித்தனமென்றே சொல்லுவோம்.

மற்ற காங்கரசுக்காரர்களும் இந்த விவசாய வருமான வரியை எதிர்க்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் காங்கரஸ்காரர்கள் இந்த வரிக்கு எதிர்ப்பாய்ச் சொல்லும் காரணம் என்னவென்றால், இந்த சர்க்கார் பொதுஜன சர்க்கார் அல்லவாதலால் இந்த சர்க்கார் போடக்கூடாது என்று சொல்லுகிறார்கள். பொது சர்க்கார் வந்து போடட்டும் என்கிறார்கள்.

பொது சர்க்கார் என்று இவர்கள் கருதுவது எது என்றால், தாங்கள் (காங்கரஸ்காரர்கள்) பதவிக்கு வந்து ஆட்சி செலுத்துவதையே கருதுகிறார்கள். அப்படி அவர்கள் பதவிக்கு வந்த காலத்தில் இந்த வரியை அவசியம் போடுவார்கள் என்றே கருதலாம். ஏனெனில் அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் இந்த வரியையும் இன்னும் சில வரிகளையும் ஆதரித்து இருக்கிறார்கள்.

ஆனால் ரெட்டியார், இவர்களோடு சேர்ந்துகொண்டு இந்த வரியைப் போடக்கூடாது என்று சொல்வதற்கு அருத்தமேயில்லை. ஏதாவது அருத்தமிருக்குமானால், தாம் பணக்காரர்கள் பிரதிநிதியே ஒழிய ஏழை மக்கள் பிரதிநிதி அல்ல என்பதைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. ஏனெனில் ரெட்டியார் அவர்கள் இந்தச் சர்க்காரைப் பொறுப்பற்ற சர்க்கார் என்று சொல்ல முடியாது. இவரே கவர்னரை இனியும் 5 வருஷத்துக்கு இருக்கவேண்டும் என்று வேண்டி இருக்கிறார். பொதுவாகப் பேசுவோமேயானால் யார்தானாகட்டும் மிராசுதாரர்களைத் தவிர எவரும் விவசாய அதிக வருமான வரியை எதற்கு ஆக ஆட்சேபிக்க வேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை. மிராசுதாரர்களுக்கு சதுருக்கும், லீலைக்கும், பார்ட்டிக்கும், சினிமா நட்சத்திரங்களுக்கும் பணம் வேண்டும்.

இன்று விவசாயத் துறையில் இரண்டுவகை மக்கள் இருப்பதை எவரும் மறுக்கமுடியாது. அவை:

ஒன்று—விவசாயத்தினால் ஜீவனம் செய்பவர்கள்.

மற்றொன்று— விவசாயத்தால் பொருள் சேர்ப்பவர்கள், அல்லது

விவசாயத்தால் ஆடம்பரவாழ்க்கை நடத்துபவர்கள்.

விவசாயத்தில் ஜீவனம் செய்பவர்களை இப்போது போடப்போகும் வரி ஒன்றும் பாதிக்கப் போவதில்லை என்பதோடு, இன்று நிலவரியாக் கஷ்டப்படுவதாகச் சொல்லப்படும் உண்மையான கஷ்டவாளிகளுக்கு சிறிதாவது நன்மை செய்யவும் போகிறது என்பது உறுதி. சர்க்கார் இந்த வரி போடுவதற்கு ஆகச் சொல்லப்படும் காரணங்களைக் கொண்டும் இது நன்றாய் விளங்குகிறது. (இந்தக் கருத்தைக்கொண்டுதான் சுயமரியாதை இயக்கமும் ஜஸ்டிஸ் கட்சியும் இந்த வரியை அமுலுக்கு கொண்டுவர 10-வருடத்துக்கு முன்பே முடிவு செய்ததாகும். பிறகு காங்கரசும் ஒப்புக்கொண்டதாகும்)

இரண்டாவது கூட்டத்தாரைப் பற்றி யோசிப்பதென்றால்,

சாதாரணமாக இன்று விவசாயம் பல செல்வவான்களுக்கு பொருள் வருவாயாகவும், பல மிராசுதார்களுக்கு ஆடம்பரவாழ்வு இல்லாவிட்டாலும் பூமி சேர்ப்பதற்காகவும் பயன்பட்டு வருவதை நாம் நேரில் பார்த்து வருகிறோம். பூமி வாங்குபவர்களில் பெரும்பாலோர் 100க்கு 75பேர்களுக்கு மேலாக, "இந்த பூமி வாங்கினால் 100க்கு என்னவட்டிகிடைக்கும்?" என்று கணக்குப்பார்த்துதானே பூமி வாங்குகிறார்கள்? மற்ற 25-பேர்களில் வேண்டுமானால் குடும்பத்துக்கு சாப்பாட்டுக்கு தானியம் வரும் என்றும் தொழில் செய்து பலன் எடுத்துச் சாப்பிட நிலம் வேண்டும் என்று கருதி வாங்குபவர்கள் இருக்கக்கூடும்.

இதில் மேற்கண்ட 100க்கு 75 பேர்களான நிலம் வாங்கி வட்டிக் கணக்கு வரும்படி அடையும் வரும்படிக்காரர்கள் இடம் இருந்து ஏன் வரி வசூல் செய்யக் கூடாது என்று கேட்கிறோம்.

ஒரு லேவாதேவிக்காரர்; நாட்டுக்கோட்டையார் 5 லட்ச ரூபாய் மூலதனம் வைத்து வருஷம் 25 ஆயிரம் ரூபாய் விதம் சம்பாதித்து 4 வருஷத்திய லாபப் பொருளையும், அதிக வட்டி வரவில்லை என்று கருதி அசலில் 2 லட்சம் ரூபாயையும் போட்டு 3 லட்ச ரூபாயில் 60 வேலி நஞ்சை நிலம் வாங்கி, அதன் மூலம் இவர் சர்க்கார் கிஸ்து போக வருஷம் ஒன்றுக்கு 15ஆயிரம் ரூபாய் வரும்படி பெறுவாரேயானால் இந்த 15 ஆயிரம் ரூபாய்க்கு உண்டான வருமான வரியை சர்க்கார் அடைவதில் இந்தலேவாதேவிக்காரருக்கு எப்படி நஷ்டமோ அல்லது வரி கொடுக்கமுடியாத கஷ்டமோ ஏற்படுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை. மிராசுதாரர்களைத் தான் எடுத்துக்கொண்டு பார்த்தாலும் ஒரு மனிதன் 100 வேலி, 500 வேலி, 1000 வேலி நிலம் வைத்துக்கொண்டு அவற்றிலிருந்து வருஷம் 1-க்கு முறையே 25000, 1,25,000 2,50,000வீதம்(அல்லது சற்று ஏறக்குறைய) வரும்படி வருகிறவர்களிடம் இதற்கு வருமான வரி வாங்கினால் யாருக்கு என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம். பூமிகள் ஒரே மனிதனிடம் 100, 200, 500, 1000, 10000 ஏக்கர்களாகப் போய்ச் சேருவதென்றால் அதை மற்ற மக்கள் தங்கள் ஜீவனத்துக்கு மாத்திரம் கூலிபெற்றுக் கொண்டு பயிர் செய்து பலன் விளைவித்துக் கொடுத்து, பூமிக்குடையவர்களை மேலும் மேலும் பூமி சேரும்படி செய்வது என்றால் இது வியாபாரம் என்பதல்லாமல் இதற்கு வேறு பேர் என்ன கொடுப்பது என்பது நமக்குத் தெரியவில்லை.

விவசாய வருமானத்திற்கு வரி போடாத காரணத்தாலேயே மக்கள் தங்கள் வருவாய்களை தொழில் துறையில் போடாமல் பூமிகளில் போட்டு லாபம் சம்பாதிக்கத் துணிந்து விடுகிறார்கள்.

இனி, அடுத்தாற்போல் விவசாய வருமான வரி மாத்திரம் போடாமல் ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணத்திற்கு மேல் பூமி உள்ளவர்களுக்கு அதிக விகிதாச்சாரம் பூமி வரியும் விதிக்கவேண்டியது அவசியமாகும். இன்று பணத்தை பாங்கியில் போட்டானால் 100க்கு வருடம் ஒன்றுக்கு 2½ வட்டிக்குமேல் வரும்படி யுத்தக் கடன்பத்திரத்திதான் கிடைக்கிறது. ஆனால் பூமி வாங்கினால் 100க்கு 4½ முதல் 6வரை சாதாரணமாக வட்டி கட்டும்படி பூமி வாரமாய் கிடைக்கிறது. அதனாலேயே பூமி வாங்குகிறார்கள்.

அன்றியும் வீடுவாங்கி, வீட்டு வாடகை சம்பாதிக்கும் வீட்டு உடைமைஸ்தர்களுக்கு வருமான வரி இருக்கும்போது, பூமி வாங்கி பூமி குத்தகை வரும்படி சம்பாதிக்கும் பூமி வரும்படி உடையவர்களிடம் ஏன் வரிவசூலிக்கக்கூடாது என்பதற்கு என்ன காரணம்?, இவர்கள் (தோழர் B. ராமச்சந்திர ரெட்டியாரும் மற்றவர்களும்) சொல்லக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகையால், இந்த ஹோப் துரையவர்களை கவர்னராகக்கொண்ட சர்க்கார் இந்த ஒரு நல்ல காரியத்தையாவது செய்து ஏழை மக்களுக்கு நண்பராக ஆக முயற்சிப்பார்களாக.

## காங்கரசு பதவிக்கு வருமா?

காங்கரசுக்காரர்கள் கிளர்ச்சி ஆரம்பித்த காலம் முதல் கிளர்ச்சி செய்து சிறை செல்லுவதும், சிறை சென்ற பின் கிளர்ச்சி ஒழிந்து போவதும், பிறகு சிறையிலிருந்து விடுதலை ஆவதற்கு முயற்சிப்பதும், அதற்கு ராஜி பேசுவதும், அந்த ராஜி பேச்சுக்குக் கிளர்ச்சியை நிறுத்துவதாகப் போலியாக ஒப்புக்கொள்ளுவதும், சர்க்கார் கிளர்ச்சி தீர்மானங்களை வாபீசு வாங்கும்படி கேட்பதும், காங்கரசார் அத்தீர்மானங்களுக்கு வேறு அருத்தம் சொல்லுவதும், சர்க்கார் ஒப்புக்கொள்ளாவிட்டால் தீர்மானத்தை வாபீசு வாங்கிக் கொண்டு கிளர்ச்சி துவக்கின காலத்தில் தாங்கள் எந்த நிலையில் இருந்தார்களோ அதைவிட கீழான நிலையிலாவது இருப்பதற்குக் கஷ்டப்படுவதும், சர்க்காரைக் கெஞ்சுவதுமாகவே இந்த 25 வருஷ காலமாக இருந்து வந்திருக்கிறார்கள். இதை அனுசரித்தே மந்திரி வேலையை விட்டுப் போனவர்கள் இப்போது ஆகஸ்டு தீர்மானத்தை வாபீசு பெற்றுக்கொண்டு ஜெயிலிலிருந்து விடுதலையாகி பழைய மந்திரி நிலைமையைவிட கீழான அதாவது எல்லாக் கட்சி மந்திரிகளையும் சேர்த்துக்கொண்டு எப்படியாவது பதவிக்கு வரப்பார்க்கிறார்கள். இந்த முயற்சியின் பயனாய் காங்கரசுக்கு ஒரு சமயம் பதவி பிச்சை

யில் பங்கு கிடைக்காமே ஒழிய, காங்கரசின் மானம் சக்தி சிரிக்கப் படப்போகின்றது என்பதில் சந்தேகமில்லை.

இனி வருங்காலத்தில் பதவிகள் ஒரு பொறுப்பாக இருக்குமே தவிர, முன்காலம் போல் அது ஒரு போகப்பொருளாக இருக்க முடியாது என்று எச்சரிக்கை செய்வோம்.

யுத்தத்தினால் நாம் இந்த நிலைமைக்கு வந்துவிட்டோம்; அதாவது இந்த மாகாணத்தைப் பொருத்தவரை நம்ம கட்சித் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கத் தயாராய்—தகுதியாய் இல்லாத எந்த மந்திரி சபையும் ஆட்சியில் இருப்பது என்றால் நம்மவர்களைப்—பதினாயிரக்கணக்கான மக்களை சிறையில் வைத்து அல்லது கால் கைகள் முறியும்படி அடித்து வீழ்த்தி அல்லது தாலமுத்து நடராஜன் சமாதுகள் போல் பல சமாதுகள் எழுப்பாமல் ஆட்சியில் இருக்க முடியாது என்பது திராவிட மக்கள் தீர்ப்பாகும்.

ஆதலால் மந்திரி பதவி வந்துவிடுமோ என்றும், யார் மந்திரிகளாய் வருவார்கள் என்றும், நம் கட்சியின் கொள்கை என்ன என்றும் எந்தத் திராவிடரும் யோசிக்க வேண்டியதில்லை.

ஆனால் மந்திரி ஆட்சி ஏற்பட்டால் நம் கடமை என்ன என்பதைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து ஒவ்வொருவரும் அம்முடிவுக்குத் தயாராய் இருக்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறோம். நம் கட்சி நிலை ஏற்கனவே தெரிந்ததாகும். எல்லாப் பிரச்சினைகளும் கட்சித் தீர்மானங்களில் இருக்கின்றன.

ஆணவத்தோடு ஆட்சியில் அமர்ந்து அதிகாரம் செய்த போதே பயப்படாமல் நாள் குறிப்பிட்டு முறியடித்து விரட்டின நாம், இப்போது அவர்கள், வீரம் கெட்டு மானமற்று நாணயம் கெட்டு கெஞ்சிக் கூத்தாடி பதவிக்கு வருகிற காலத்திலா இவர்களை அனுமதித்துக்கொண்டிருப்போம்! ஆதலால் அவர்கள் வந்துவிடுவார்களே என்று யாரும் சிந்திக்கவோ பயப்படவோ வேண்டியதில்லை என்றும், வந்தால் தான் நம் மக்களுக்கும் ஒரு

ரோஜா முத்தையா

## பெரியார் உடல் நிலை

பெரியார் அவர்களின் காக்குப் புண் அநேகமாக குணப்பட்டு விட்டது. ஆனால் சிறிது களைப்பும் மயக்கமும் இருந்து வருகிறது. அதனால் காரைக்குடி மாநாடு முடிந்தவுடன் ஒரு மாத காலம் மலை வாசம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒருமாத காலம் வரை எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்.

## பெரியார் சுற்றுப்பிரயாணம்.

1-4-45-ந் தேதி சென்னையில் 'திராவிட மாநாடு'
2-4- சென்னையில் நடராஜன்—தாலமுத்து கல்நாட்டுவிழா, தலைமை
5-4- சென்னைக்கடுத்த குன்னத்தூரில் பொதுக் கூட்டம்
6-4- குடந்தையில் சீர்திருத்தத் திருமணம், தலைமை
7-4- திருச்சியில் தோழர் டி. பி. வி. அவர்கள் தேநீர் விருந்து
8-4- காரைக்குடி மாநாடு
10-4- ஈரோடு திரும்புதல்.

சுறுசுறுப்பும் விருவிருப்பும் ஏற்படும் என்றும், புதிய சீர்திருத்தம் வருவதற்குள் இப்படி ஒரு மாற்றமேற்பட்டால், அது புதிய சீர்திருத்தம் நம் இஷ்டப்படி ஏற்பட ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சென்னை நகரத்தின் மாண்பு

(வழிப்போக்கன் தீட்டியது)

சென்னை ஹைக்கோர்ட் பிரதம நீதிபதியின் வாக்கு:

"இந்தியாவிலிருக்கும் பொது மக்களின் மனிதத் தன்மையின் உணர்ச்சியானது இங்கிலாந்திலிருக்கும் மக்களின் மனிதத்தன்மையின் உணர்ச்சிக்கு மிகவும் தூரமானது. உதாரணமாக, சென்னையை எடுத்துக்கொண்டால் ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பதற்குக் கூட இடமில்லாமல் தெருக்களிலும், தெருவின் ஓரமாயுள்ள மேடைகளிலும், அடைப்பில்லாத மைதானங்களிலும் செத்துக்கிடக்கிறார்கள், மற்றும் சென்னையில் 30 ஆயிரம் ஜனங்கள் போல் வீடு வாசல்கள் இல்லாமல் தெருக்களிலும், பாதை ஓர மேடைகளிலும் குடித்தனம் செய்து வருகிறார்கள். அங்கேயே குழந்தைகள் பிறக்கின்றன. அவைகள் அங்கேயே மழைக்கும், வெயிலுக்கும், காற்றுக்கும் ஆளாகிக்கிடக்கின்றன. போதுமான துணிமணிகள், ஆகாரங்கள் இன்றி நாதியற்றதுகள் போல் உள்ளன. இப்படிப்பட்ட இடத்தில் குழந்தைகள் மரணம் அதிகம் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அரசாங்கக் கணக்குப்படி இங்கு 1000-க்கு 170 குழந்தைகள் சாகின்றன. ஆனால் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் 1000-க்கு சராசரி 50 குழந்தைகளே சாகின்றன. இந்த நாட்டில் பொது வேலை செய்பவர்களுக்கு இந்தத் துறையில் நல்ல வேலை இருக்கின்றது" என்று பிரதம நீதிபதி சர் லைனர் லீச்சு துரை பேசியுள்ளார்.

### ஆனால் நாம் என்ன செய்கிறோம்?

குழவிக்கல்லை சாமியாக வைத்து அதற்கு தங்க ஓடு போட்ட வீடுகட்டி ஏழு சுற்று மதில் சுவரும், ஆயிரக்கால் மண்டபங்களும், வீதிக்கொரு மண்டப கட்டளை மண்டபமும் கட்டி வைக்கிறோம். அவ்வளவு தானா?, அதற்கு பட்டு குடைகள் பிடித்துக்கொண்டு போகிறோம். இவ்வளவுதானா? எண்ணிப் பாருங்கள்.

### செல்வவான்களின் வேலைஎன்ன?

பாடல்பெற்ற ஸ்தலங்களாகப் பார்த்து அங்குள்ள குட்டிச்சுவர்களையும், குப்பை மேடுகளையும் அரண்மனைகளாகவும், கோபுரமாகவும் ஆக்குகிறார்கள். மிஞ்சின பணத்திற்கு கும்பாபிஷேகம் செய்கிறார்கள்; ஆறுகால பூசை செய்கிறார்கள். அதிலும் மீதியானால் அர்த்தஜாம கட்டளையும் காரியமும் நடத்துகிறார்கள்.

### படித்த மேதாவிகள் என்ன செய்கிறார்கள்?

பெரிய புராணத்திலும், கம்பராமாயணத்திலும், சிலப்பதிகாரத்திலும் கருப்பொருள் தேடி நுண்பொருள் கண்டுபிடித்து அரும்பொருளை வெளியாக்கி பரவத்தை

அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வீதியில் நடந்தால் பிச்சைக்காரர் தொல்லையும், பெரும் வியாதியஸ்தர்களின் பரிதாப காட்சியும்—அவற்றால் மனதிற்கு ஏற்படும் வெறுப்பும் வேதனையும் சகிக்கக் கூடியதாய் இல்லை.

சென்னையில் வீதிக்கொரு கோயிலும், இன்னைக்கு ஒரு கழுத்து முண்டத்தோடு இருக்கும் சாமியும், கோயில்கள் தோறும் 1000ம் காண்டில்பவர் விளக்கு கம்பங்களும் ஜொலிக்கின்றன. தெருவில் போகிறவன்-ஹாட்டு, பூட்டு, கோட்டு, டை, காலர், போட்டுக்கொண்டு போகிறவனும், இந்த கோயில்களையும் கழுத்து முண்ட சாமிகளையும் கண்டால் பூட்சைக் கழட்டி வைத்துவிட்டு, சாமியை வணங்கி விட்டு மறுபடியும் அதை போட்டுக்கொண்டு போவதைக் காணலாம்.

இன்னும் சிலரைப் பார்த்தால் வீட்டிலே அவர்கள் வளர்க்கும் நாய்களிடத்திலும் தமிழில் பேசாமல், ஐரோப்பிய தோரணையிலே வாழ்ந்துகொண்டு; பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், நாய்களுக்கும் ஐரோப்பிய பெயர்களையே வைத்து அழைத்துக்கொண்டு; கதவுக்கும், வாசல் நிலவுகளுக்கும் மஞ்சளும், குங்குமமும், விபூதியும் பூசி விழுந்து கும்பிடுவதும்; முகம் நிறைய மஞ்சளைப் பூசி அஞ்சள் குரங்கு போல் ஆக்கிக்கொள்வதும்; அதற்கு மேல் விபூதியும், குங்குமமும், கரிப்பொட்டும் வைத்துக்கொள்வதும்; இவர்களுடைய ஆண்கள் ஆங்கிலமே பேசிக்கொண்டு ஆங்கில உடையும் தரித்துக்கொண்டு நெற்றியில் விபூதியும் நாமமும் போட்டுக்கொண்டு, ஆங்கில தொப்பிபோட்டுக்கொண்டு நடப்பதும்; வீட்டுச் சுவர்களில் கோபிகள் நிர்வாணமாக நின்று கையைதூக்கிக் கும்பிடும் புன்னைமர கிருஷ்ண லீலை படங்கள் தொங்கவைத்து அதற்கு பூஜை செய்வதும், இது சம்பந்தமான கதை, காலட்சேபங்கள் கேட்டு மகிழ்வதுமாய் இருக்கும்.

இப்படிச் செலவுசெய்து இப்படி நடந்துகொள்ளும் மக்களுக்கு, மற்ற மக்கள் படும் கஷ்டம் தெரிவது என்றால் எப்படி சாத்திய

மாகும்? பிரதம நீதிபதி சொன்னது போல. சென்னை திருந்தப்பட வேண்டுமானால், "கடவுளுக்கும்" அக்கிரகாரப்பாட்டிக்கும் கவலை இருக்குமானால் சென்னைக்கு மேல் 2000 விமானங்கள் பறந்து 2 லட்சம் டன் எடையுள்ள அக்னிக் குண்டுகள் சோனைமாரி போல் பொழிந்தாவது அல்லது ஒவ்வொருவருடைய உள்ளத்தில் புகுந்து நல்லறிவு உறுத்தியாவது திருத்தவேண்டும். வேறு வழியில் திருந்துவது என்பது 'ஆரியம்" உள்ளவரை சுலபத்தில் நடக்கக் கூடிய காரியம் அல்ல என்றே கருதுகிறோம்.

உங்கள் அபிப்பிராயம் என்ன?

## நமது அனுதாபம்

இந்திய சர்க்காரின் சப்ளை இலாகாவில் சென்முதல் பிரதம அதிகாரியா இருந்துவந்த தோழர் டி. எஸ். பிள்ளை அவர்கள் மார்ச் 24-ந் தேதி இரவு 11¼ மணிக்கு தம் வீட்டில் இருதய நோயினால் இயற்கையெய்தார் என்பதைக் கேட்டு வருந்துகிறோம். தோழர் பிள்ளை அவர்களுக்கு 44 வயது. இவரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## சிதம்பரம் இளங்கோ மன்றம் 5-வது ஆண்டுவிழா

சிதம்பரம் இளங்கோ மன்ற 5-வது ஆண்டு விழா 25-3-45-ல் திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சொற்போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு புரட்சிக்கவி பாரதிதாசன் பரிசு வழங்கினார். தலைவர் முன்னுரைக்குப் பின் கவி பாரதிதாசன், புலவர் நாட்டார் சிட்டம், தோழர் எஸ். கே. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

புலவர் கா. மு. மாணிக்கம் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

## திருச்சி ஜில்லா ஷெடியூல் கிளாஸ் பெடரேஷன்

18-3-45 மாலை 7 மணிக்கு திருச்சி வரகனேரி பென்ஷனர் தெரு மாரியம்மன் கோவிலில் தோழர் பி. சிவபிச்சை தலைமையில் தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் எம். சின்னராம் அவர்களைத் தலைவராகக்கொண்ட "திருச்சி ஜில்லா ஷெடியூல் கிளாஸ் பெடரேஷன்" ஒன்று நிறுவப்பட்டது. மற்ற நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வருக! வருக!!

இக்கோடை விடுமுறையிலும் சுற்றுப் பிரயாணத்தை வரவேற்று பல கழகங்களும் பெரியோர்களும் எழுதியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு அவர்களுக்கு நம் மாணவத் தோழர்கள் ஏப்ரல் திங்கள் 15க்கு மேல் வருவார்கள் என்றும் அவர்களை வரவேற்கத் தயாராய் இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். மாணவர்கள் உறுதியாய் வரும் நாள் அடுத்த அறிக்கையில் அறிவிக்கப்படும்.

பல கல்லூரி மாணவர்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் கலந்துகொள்ள இருக்கிறார்கள். மேலும் கலந்து கொள்ளும் மாணவர்கள் அடுத்த வாரத்திற்குள் தங்கள் பெயரை வீடு முறை முகவரியுடன் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கீழ்க்கண்ட தோழர்கள் கலந்துகொள்ள விரும்புவதாய் உறுதி தெரிவித்துள்ளார்கள். மேலும் சிலர் மற்றும் தங்கள் தோழர்களையும் சேர்த்துக்கொண்டு எழுதுவதாய் எழுதியுள்ளார்கள். மாணவர்கள் தயவு செய்து "குடிஅரசு" அறிக்கையையே அழைப்பாகக் கொண்டும் வரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தோழர்கள் எ. பி. ஜனார்த்தனம் பி. ஏ., இரா. தண்டபாணி, மதியழகன், கே. தியாகராஜன், மா. நன்னன், என். இமயவரம்பன், கே. வெங்கடாசலம், எஸ். நக்கீரன், கே. எஸ். வேள்பாரி, ஆ. மா. பெரியசாமி, வெ. பொ. சாமிநாதன், தமிழ் ஒளி, ஆர். வில்லாளன், ப. வெற்பரசன், வை. நன்மாறன், கே. எஸ். கழற்செங்கண், பெ. மு. ஓசாந்து, எஸ். அறிவுடைநம்பி, எம். கிருஷ்ணன், நா. அறிவழகன், ப. திருஞானசம்பந்தன்; ரா. வெங்கடாசலபதி, 10 வயது வீரமணி முதலிய மாணவர்களும், பகுத்தறிவுப் புலவர்கள் தில்லை நா. மு. மாணிக்கம், கரந்தை வி. அ. அரங்கசாமி அவர்களும், கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் பி. கே. ஐயா, கே. எஸ். மணி, எழில்நிலவன், ஆறுமுகம், முருகையன், சீ. பி. கண்ணன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

## திருச்சி வடமண்டல மாணவர் மாநாடு

டை மாநாட்டு வரவு செலவில் மீதம் உள்ள ரூ. 22–12–9 தோழர் வி. பி. சாமிநாதன் அவர்களின் பெயரால் பாதுகாப்பு நிதியில் (Savings Bank) போடப்பட்டுள்ளது என்று மாநாட்டு பொருளாளர் தோழர் எஸ். நாராயணசாமி அறிவிக்கிறார்.

( 2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

சென்னை திருவல்லிக்கேணி அபிபுல்லா சாயபு தெரு 79வது எண்ணுள்ள வீட்டில் 11-3-45தேதி 30, 31, 32, 33, 34வது டிவிஷன்களின் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் ஏ. சி. பாலசுந்தரநாயகர் பி. ஏ., எல். டி, தலைமையில் கூடியது. ஷை தலைவரே அம்மாவட்ட கழகத்திற்குத் தலைவராகவும், தோழர் ஜெ. கோபால கிருஷ்ணன் காரியதரிசியாகவும், மற்ற நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

சேலம் அம்மாப்பேட்டை திராவிடம் கழகக் கூட்டம் 1-3-45-ல் தோழர் எஸ். எம். அர்த்தனாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. ஆர். நாராயணன், எஸ். வரதராஜுலு, கே. கெ. சாம்பலிங்கம், ஜே. எஸ். பழனிச்சாமி, டி. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினார்கள்.

"திராவிடநாட்"டில் வரும் பகுத்தறிவு கட்டுரைகளைத் திரட்டி புத்தக வடிவில் வெளியிட தோழர் அண்ணாதுரை அவர்களைக் கேட்டுக் கொள்வதாகவும், "குடி அரசு" எழுத்துக்களைப் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் கே. இராமசாமி அவர்கள் தலைமையில் ஷை தேதியில் கூடிய பனகால் திராவிடர் கழகக் கூட்டத்திலும், மேற்கண்டவாறே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

அருப்புக்கோட்டை திராவிட கழக நிர்வாகிகள் கூட்டம் தோழர் எஸ். வி. கே. முத்துச்சாமி அவர்கள் இல்லத்தில் 25-2-45-ந் தேதி நடந்தது.

அருப்புக்கோட்டைத் தோழர் வா. து. கைலாசம் அவர்களின் மகளும், மதுரை தோழர் முருகேசன் வாழ்க்கைத் துணைவியாருமாகிய தோழர் அமிர்தம் அம்மையார் மரணமடைந்ததற்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காரைக்குடியில் நடக்கும் இராமநாதபுரம் மாவட்ட மாநாடு சம்பந்தமாய் டிக்கட்டுகள் விற்க ஒரு கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

திருவரங்கம், திருவானைக்காவல் திராவிடர் கழகத்திற்குத் தலைவராக எஸ். சின்னசாமி முதலியாரும், காரியதரிசியாக எஸ். ஜி. ராஜகோபாலும், மற்றும் நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

உமலூர்தாலுகா, வைவாசி திராவிடர் கழகத்தில் 20-2-45-ந்தேதி தோழர் பெ. வெங்கடாசலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் செ. தெ. நாயசம் அவர்கள் மறைவுக்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

* *

வட சென்னை மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் 16-3-45-ந் தேதி நடைபெற்றது. அதில் முன் காரியதரிசி டி. ஜி. கிருஷ்ணசாமியை உபதலைவராகவும் தோழர் எம். கே. டி. சுப்ரமணியம் காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

மகாதேவபுரத் திராவிட கழகக் கூட்டம் 30-1-45-ந் தேதி கூடியது. ஆதி திராவிடத் தெருவில் மண்ணெண்ணெய் கிடைப்பதில் உள்ள கஷ்டத்தை நீக்குமாறு கலெக்டர் அவர்களைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

கொல்லிடம் திராவிடர் கழகத்தின் சார்பில் 17-3-45-ந் தேதி தோழர் பழனியப்ப பிள்ளை தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. "திராவிடர் நிலையும் நாட்டுப் பிரிவினையும்" என்ற பொருள் பற்றி தோழர்கள் புலவர் நா. மு. மாணிக்கம், எஸ். கே. சாமி, சம்மந்தம், மணவழகன் ஆகியோரும் பேசினார்கள். பின், தலைவர் வீட்டில் 30 பேருக்கு மேல் சமநிலை உணவு அளிக்கப்பட்டது.

* *

பிச்சாண்டார் கோவில் டி. சங்குதாஸன் தலைமையில் 7-1-45-ந் தேதி திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கழக நிர்வாக உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

பொன்மலை, திராவிடர் கழக அங்கத்தினர் கூட்டம் 4-2-45 மாலை 7-மணிக்கு தோழர் ஜி. பாலங்குசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. சின்னையன், டி. கிருஷ்ணசாமி, டி. பி. வேதாசலம், மீன்புசல் ராஜு, வி. எஸ். பெருமாள் முதலியவர்கள் பேசினார்கள்.

25-2-45ல் ஷை கழகப்பொதுக்கூட்டம் தோழர் எஸ். நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருச்சி மாவட்ட திராவிடர் மாநாட்டை நடத்த பல கமிட்டிகள் நிறுவப்பெற்றன. ஷை கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 27-2-45ல் தோழர் என். நடராஜன் தலைமையில் நடைபெற்றது. வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது. சர் ஏ. டி. பன்னீர்செல்வம் நாள் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.

o o

பூக்கோட்டம் திராவிட இளைஞர் கழகத்தின் ஆதரவில் ஓடாக்கல்லூர் ஜெ. இராமச்சந்திரன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

* *

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த நாசரேத்தில் 5-3-45-ல் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது. தோழர்கள் கே. பி. ஆறுமுகச்சாமி நாடார் தலைவராகவும், வ. ஸ். தனுஷ்கோடி நாடார் துணைத் தலைவராகவும், பீ. எஸ். கே. ஜெயபால் செயலாளராகவும், ஜி. பி. ஜகத்மோகஸ் துணைச் செயலாளராகவும், என். மாடசாமி மூப்பனார் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை வரவேற்றும், ஒரு வாசகசாலை திறக்கவும் தீர்மானிக்கப்பட்டது. தோழர் பி. எஸ். கே. ஜெயபால் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

* *

பரமன்குறிச்சிக் கிராமத்தில் கிராமத் திராவிடர் கழகக் கூட்டம் 17-3-45-ல் தோழர் த. அ. மு. பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தோழர் குமாரகுருபரர் தலைவராகக் கொண்டு நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## திருமணம்

மன்னார்குடி: 16-3-45 மாலை 5-மணிக்கு தோழர் ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடுவகளப்பால் தோழர் க. வைத்திலிங்கத்திற்கும் தோழர் சிரங்கத்தம்மாளுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. பல தோழர்கள் சீர்திருத்த திருமணம்பற்றி சொற்பொழிவாற்றினர். பின் திராவிடநாடு, 'குடி அரசு' இதழ்களுக்கு முறையே ரூபாய் ஒன்று மணமக்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டது. தோழர் ஆர். ராமச்சந்திரன் வந்தனங்கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

o o

போளூர் தாலுகாவில் வாரணி திராவிடர் கழகத் துணைத் தலைவர் இராமசாமி அவர்களுக்கும், தோழர் இராசேசுவரி அம்மையாருக்கும் 8-2-45ந் தேதி காலை சீர்திருத்த முறைப்படி திருமணம் நடைபெற்றது. கழகத் தலைவர் தோழர் சாமிநாதன் தலைமையில் அன்று மாலை கூடிய பாராட்டுக் கூட்டத்தில் பல அன்பளிப்பு நூல்களும் வாழ்த்துக்களும் அளிக்கப்பட்டன. பல இயக்கத் தோழர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

நெல்லை ஜில்லா ஸ்ரீ வைகுண்டம் தாலுகா வல்லக்குளம் எஸ். வேலு & ஆறுமுகவடிவு அம்மாளுக்கு 18-2-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஓர் ஆண் மகவு ஜெனனமானது. மகவுக்கு "ஜெயசீலன்" என பெயரிடப்பட்டது. "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

## பிறப்பு

இராமநாதபுரம் மாவட்டம் கல்லல் தம்பதிகளான க. அழகையா—அ. சுகம்மாள் அவர்கட்கும் 25-1-45ந் தேதி புதன்கிழமை ஆண் குழந்தை பிறந்தது. தாயுஞ் சேயும் நலமாயிருக்கின்றார்கள். குழந்தைக்கு, கேசவன், என்ற பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ. 5. அன்பளிக்கப்பட்டது.

o o

திருச்சி: சென்ற 14-12-43-ந் தேதி செயங்கொண்ட சோழபுரத்தில் திருச்சி வழக்கறிஞர் இ. பெ. வேதாசலம் அவர்கள் முன்னிலையில் தன்மதிப்பியக்கத் திருமணஞ் செய்துகொண்ட திருச்சி தம்பதிகளான இ. பெ. முத்துசாமி—சோதியம்மைக்கும் சென்ற 17-2-45-ந் தேதி சனிக்கிழமையன்று ஆண் மகவு பிறந்து, தாயும் சேயும் சுகமாய் இருக்கிறார்கள்.

இம் மகப்பேற்றின் மகிழ்ச்சி நினைவின் அறிகுறியாக "குடி அரசு" "திராவிட நாடு" வாரத் தாள்களுக்கு தலா ரூபாய் ஒன்று அன்பளிப்பு அளிக்கப்பட்டது.

* *

கரூர் திராவிடர் கழக தலைவர் சி. கோவிந்தராசவின் வாழ்க்கைத் துணைவி ராசம்மாள் ஒரு மகள் பெற்றெடுத்து அதற்கு திராவிட இராணி என்ற பெயர் வைக்கப்பெற்றது. இதன் ஞாபகார்த்தமாக ஷை கழக கட்டிடத்திற்கு ரூபாய் ஐம்பது நன்கொடை கொடுக்கப்பட்டது.

o o

நெல்லை ஜில்லா மேலப்பாளையம் அம்பிகாபுரம் தோழர் டேவிட் ஜோன் அவர்களின் மூத்த புதல்வருக்கு 4-2-45ந் தேதி கொழும்பு சின்னமன்காடன் (பெட்டி சர்ச் ஆலயத்தில்) ரெவரெண்டு S. M. லட்வட் & எ. சாட்டர் பி. ஏ, எல். டி, அவர்களால் "டேவிட் பாலன்" என பெயரிடப்பட்டது. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## மறைவு

சாக்கோட்டை சுயமரியாதைச் சமதர்ம சங்க அங்கத்தினர்களில் ஒருவரும், திராவிட ஏழை மாணவர் கல்வி உதவி நிதிக்கு பெரிதும் உதவிவருபவருமான ஆருந்தம்பட்டு தோழர் ஆர். எஸ். எ. அழகன் (சிலோன்) அவர்களின் புதல்வன் 11 வயதுடைய செல்வராஜ் என்ற மாணவன் 2[illegible]-2-45-ந் தேதி சொந்த ஊரான ஆருந்தம்பட்டியில் அம்மை நோயால் மரணமடைந்துவிட்டான்.

o o

சென்ற தைத்திங்கள் 26 ஆம் நாள் மறைந்த சேலம் புதுத்தெரு தோழர் எம். பி. சின்னப்பன் குமாரர் அன்புமணியின் நினைவாக இறுதிச் சடங்குகள் புரோகிதமின்றி நடைபெற்றன.

o o

சேலம் புதுத்தெருவில் உள்ள எம் கண்டி அவர்களின் புதல்வன் குணசீலன் இறந்ததை முன்னிட்டு மாசித்திங்கள் 8-ஆம் நாள் கருமாதிச் சடங்குகள் புரோகிதமின்றி நடைபெற்றது.

o o

வேலூர் (சேலம்) தோழர் எஸ். மாணிக்கம் பிள்ளை அவர்களின் இல்லாள் இறுதிக்கடன் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் இரா. நாயலடி தலைமையில் 30-1-45-ந் தேதி நடைபெற்றது.

* *

சொராநாடு வாசியும் இந்தி எதிர்ப்புக்காக சிறைசென்றவருமான டி. பொன்னையா அவர்கள் 2-3-45யன்று மாரடைப்பினால் திடீரென இயற்கையெய்தியதை முன்னிட்டு ஷை ஊர் திராவிடர் கழகத்தின்சார்பாக அனுதாபம் தெரிவிக்கப்படுகிறது.

o o

கோவை ஜில்லா போர்டு மெம்பர் ஒலகடம் பஞ்சாயத்துப் போர்டு மாஜி பிரசிடெண்டு தோழர் ஒ. பி. முத்துக்கிருஷ்ண ரெட்டியாரவர்கள் 9-3-45-ந் தேதி மாலை 3 மணிக்கு காலஞ்சென்றுவிட்டார்.

o o

ஐயம்பேட்டை தோழர் அன்பு கிருட்டிணசாமி அவர்களின் சகோதரியார், தோழர் தர்மாம்பாள் அவர்கள் 3-3-45 மாலை 4-மணிக்கு இயற்கை எய்திய செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம் என ஐயம்பேட்டை திராவிட கழகத்தார் தெரிவிக்கின்றனர்.

* *

திருச்செங்கோடு சுயமரியாதைத் தோழர் எஸ். கே. வரதராஜுலு அவர்களின் தந்தையார் ஆர். கிருஷ்ணசாமி அவர்கள் 11-2-45-ந் தேதி இயற்கையெய்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

* *

திருநெல்வேலி ஜில்லா இராமானுஜம்புதூர் தோழர் அ. கா. பெருமாள் தான் சோமசுந்தரம் அவர்களின் தாயார் சிவகாமியம்மாள் 26-2-45-ந் தேதி தமது 90-வது வயதில் இயற்கை யெய்தியதற்காக அன்னாருடைய குடும்பத்தார்களுக்குத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாக ஷை ஊர் வாசியுமான தற்சமயம் கொழும்பில் வசிக்கும் ஆர். எம். முத்தையா தெரிவிக்கிறார். "குடி அரசு" வளர்ச்சிக்காக அவர்களின் பெயரால் ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

மைலாப்பூரில் மீன் பிடிப்போர் சமூகத்திற்கு பெரிதும் உழைத்தவரான தோழர் இ. சின்னராசு என்பவர் தமது 25-வயதில் 24-2-45ந் தேதி பிற்பகல் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கப்படுகிறது.

* *

காஞ்சிக்கோவில் திராவிடர் கழகத் தலைவர் கா. பெ. முத்துசாமியின் தாயார் தோழர் ராசம்மாள் அவர்கள் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 12-3-45-ந் தேதி யன்று இரவு இயற்கை எய்தினார்.

o o

கோபி: இவ்வூர் பிரபல பாத்திர வியாபாரியும், நமதியக்கப் பிரபலஸ்தருமான தோழர் வி. சுப்புபண்டாரம் அவர்கள் சென்ற 3-3-45ந் தேதி தமது 59வது வயதில் காலமானார் என்ற செய்தியைக் கேட்டு வருந்துகிறோம்.

* *

புவனகிரி: பிரபல லுங்கி வியாபாரியும், நெசவுத் தொழிலாளரின் அன்பருமான ம. ஆ. முத்தையா முதலியார் அகால மரணமடைந்தது குறித்து, பெருமாத்தூர் கடைத்தெருவில், புவனகிரி கைத்தறி நெசவாளர் கழக ஆதரவில் ஷை கழகத் தலைவர் அ. ரா. ந. நடராசன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

o o

மதுரைத் தோழர் பி சீனிவாசன் அவர்கள், தமது தந்தை தோழர் பார்த்தசாரதி பிள்ளை இறந்த நினைவு நாளை (7-3-45) முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

மேலதிருப்பந்துருத்தி திராவிடர் கழக பொருள் காப்பாளர் தோழர் சண்முகம் அவர்களின் தாயார் சுமார் ஒருமாத காலமாய் நோய்வாய்ப்பட்டு 12-3-45-ந் தேதி தமது இல்லத்தில் இயற்கையெய்தினார்.


## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி

மானேஜர்.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.